கரையாமல் கரையோரம்...

சேலம் மூக்கனேரி ஏரியில் கரைக்கப்பட்ட விநாயகர் சிலைகள் கரையாமல் ஏரி கரையோரம் மிதந்தபடி உள்ளன. மண்ணால் செய்த சிலைகளைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்வது எப்போது? நாள்: வெள்ளிக்கிழமை

சேலத்தில் பழங்குடி மக்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

சேலம், செப். 18: தேனி மாவட்டம், மேகமலை வனப் பகுதியில் வசித்து வரும் பழங்குடியின மக்களை வெளியேற்றக் கூடாது என வலியுறுத்தி, தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் சார்பில் சேலம் கோட்டை மைதானத்தில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐ) மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மோகன் தலைமை வகித்தார். பழங்குடி மக்கள் சங்க மாநிலச் செயலர் ஜா. பூபாலன் பேசினார்.

மேகமலைப் பகுதியில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் மக்களை வெளியேற்றுவதைக்கைவிட வேண்டும்; 2006-ஆம் ஆண்டின் வன உரிமைச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பழங்குடியின மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கும்போது மதத்தைக் குறிப்பிடாமல், பழங்குடியினர் என்று மட்டுமே சான்றிதழ் வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

சிபிஐ மாவட்டச் செயலர் என். கே.செல்வராஜ், நிர்வாகிகள் பாரதி, ஜெகதீசன் உள்ளிட்ட பலர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

சேலம் கோட்டை மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பழங்குடி மக்கள் சங்கத்தினர்.

மக்காச்சோள சாகுபடி பண்ணைப் பள்ளி பயிற்சி

ஆத்தூர், செப். 18: சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், காமக்காபாளையம் ஊராட்சியில் அட்மா திட்டத்தின் கீழ் மக்காச்சோள சாகுபடி குறித்த பண்ணைப் பள்ளிப் பயிற்சி வகுப்பு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற பயிற்சியில், வேளாண்மை அலுவலர் ஜானகி சிறப்புப் பருவ பயிர்க் காப்பீடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மக்காச்சோளத்துக்கு ஏக்கருக்கு ரூ. 491, பருத்திக்கு ரூ. 691, நெல்லுக்கு ரூ.580 செலுத்தி விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து பயிற்சியாளர் வெங்கடாசலம், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி ஆகியோர் மக்காச்சோள அறுவடைக்குப் பிந்தைய செய்நேர்த்தி மற்றும் அறுவடைத் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

உதவி வேளாண்மை அலுவலர் ரவிக்குமார் பேசுகையில், வட்டாரத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இடுபொருள்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளதாகத் தெரிவித்தார். நெல் ரகங்கள், மக்காச்சோளம், குதிரைவாலி, உளுந்து, துவரை, நிலக்கடலை, சிறுதானிய பயறு வகைகள், நுண்ணூட்டங்கள் மற்றும் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா உள்ளிட்ட உயிரி உரங்கள் இருப்பில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ், முத்துவேல் செய்திருந்தனர். பயிற்சி வகுப்பில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

மின்சாரம் பாய்ந்து விவசாயி உயிரிழப்பு

ஆத்தூர், செப். 18: ஆத்தூரை அடுத்த கல்பகனூர் சிவகங்கைபுரத்தில் மாட்டுக் கொட்டகையை சுத்தம் செய்துகொண்டிருந்தபோது மின்சாரம் பாய்ந்ததில் விவசாயி உயிரிழந்தார். அவருடன் இருந்த பசுமாடும் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தது.

சேலம் மாவட்டம், ஆத்தூரை அடுத்த கல்பகனூர் சிவகங்கைபுரத்தைச் சேர்ந்த மணி மகன் ஜெயப்பிரகாஷ் (32). இவர் மனைவியை பிரிந்து தாய் தமிழ்ச்செல்வியுடன் வசித்து வந்தார். இவருக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில், வியாழக்கிழமை மாலை மாட்டுக் கொட்டகையை ஜெயப்பிரகாஷ் சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்போது, மின்மோட்டாரில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக மின்சாரம் பாய்ந்ததில் பலத்த காயமடைந்தார். கொட்டகையில் இருந்த பசுமாடு மீதும் மின்சாரம் பாய்ந்தது.

ஆம்புலன்ஸ் மூலம் ஆத்தூர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியிலேயே ஜெயப்பிரகாஷ் உயிரிழந்தார். அதேபோல பசுமாடும் உயிரிழந்தது. இதுகுறித்து ஆத்தூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் ரத்த தான முகாம்

ஓமலூர், செப். 18: சேலம் அரசு பொறியியல் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் ரோட்டராக்ட் கிளப் சார்பில் ரத்த தான முகாம் மற்றும் ரத்த தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மாணவர் தன்னார்வலர்கள் கல்லூரியைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குச் சென்று பொதுமக்களிடம் ரத்த தானத்தின் முக்கியத்துவம், தன்னார்வ ரத்த தானத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற ரத்த தான முகாமை கல்லூரி முதல்வர் கீதா தொடங்கிவைத்தார். சேலம் அரசு மருத்துவமனை ரத்த வங்கியின் சார்பில் மருத்துவக் குழுவினர் பங்கேற்று ரத்த சேகரிப்புப் பணியில் ஈடுபட்டனர். முகாமில் 80-க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர்.

நரசிங்கபுரத்தில் நெகிழிப் பொருள்கள் பறிமுதல்

ஆத்தூர், செப். 18: நரசிங்கபுரம் நகராட்சியில் 22 வணிக நிறுவனங்களில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆய்வில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள், கோப்பைகள் உள்ளிட்ட பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

நரசிங்கபுரம் நகராட்சியில் ஆணையர் அ. பவித்ராவின் உத்தரவின்பேரில் 22 கடைகளில் நகராட்சி அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, அக்கடைகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்கள்பயன்படுத்துவதுதெரியவந்தது. இதையடுத்து, அக்கடைகளில் இருந்த நெகிழிப் பொருள்களை பறிமுதல் செய்து அக்கடைகளின் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பபட்டது.

சமூக வலைதளம் மூலம் அறிமுகமானவரை ஏமாற்றி பணம் பறித்த மூவர் கைது

எடப்பாடி, செப். 18: எடப்பாடி அருகே நண்பர்களை தேடும் சமூக வலைதள செயலி மூலம் அறிமுகமானவரை நேரில் வரவழைத்து, அவரிடம் பணம், நகைகளை பறித்த 3 இளைஞர்களை போலீஸார் கைது செய்தனர்.

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்து உள்பட்ட எருமைப்பட்டி ஊராட்சி, வெள்ளக்கல்பட்டியைச் சேர்ந்தவர் வெங்கடேசன் (46). இவரிடம் நண்பர்களை தேடும் செயலி மூலம் அறிமுகமானவர் கடந்த 16-ஆம் தேதி தொடர்பு கொண்டு பூலாம்பட்டிக்கு நேரில் வருமாறு கூறியுள்ளார்.

இதையடுத்து இருசக்கர வாகனத்தில் பூலாம்பட்டி சந்தைத் திடல் அருகே மயானப் பகுதிக்குச் சென்ற வெங்கடேசனை அங்கு மறைந்திருந்த 3 பேர் கொண்ட கும்பல் தாக்கி ரூ. 2,000 ரொக்கம், வெள்ளி அரைஞாண்கொடியைப் பறித்துக்கொண்டு தப்பினர்.

எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வெங்கடேசன், அளித்த புகாரின்பேரில் சிசிடிவி பதிவுகளை போலீஸார் ஆய்வுசெய்தனர். இதில் கூடக்கல் பெருமாள் கோயில் கரடு பகுதியைச் சேர்ந்த மாதேஷ் மகன் கார்த்தி (23), வெள்ளரிவெள்ளி மாரனூரைச் சேர்ந்த முருகேசன் மகன் வீரப்பன் (25), எடப்பாடி நெசவாளர் காலனியைச் சேர்ந்த முருகன் மகன் பிரவீண்குமார் (20) ஆகிய மூவரும் வெங்கடேசனை தாக்கி பணம் பறித்தது தெரியவந்தது.

இதையடுத்து மூவரையும் வியாழக்கிழமை கைது செய்த போலீஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

கைது செய்யப்பட்ட கார்த்தி, வீரப்பன், பிரவீண்குமார்.

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட்.,

பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பவுண்ட், வேராவல், குஜராத்–362266
கிளை அலுவலகம் : ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட், 1/276/2, தரைத்தளம், கந்தஸ்வர்ண மெகா மால், பிளாக் B, சாரதா கல்லூரி சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம் – 636016

"பிற்சேர்க்கை –IV"
சுவாதீன (POSSESSION) அறிவிப்பு
[2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(1)]

அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் 24.03.2025 அன்று பிறப்பித்த உத்தரவில் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட, 11.03.2024 தேதியிட்ட இணைப்புத் திட்டத்தின்படி, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்ட இணைப்பின் காரணமாக, கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்தின் உடைமை உட்பட அனைத்து SARFAESI சட்ட நடவடிக்கைகளும், இணைக்கப்பட்ட நிறுவனமான ஆதித்யா பிர்லா கேப்பிட்டலுக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, இந்த அறிவிப்பு ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்டின் அதிகாரபூர்வ அலுவலரால் வெளியிடப்படுகிறது.

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, (54 of 2002) கீழே கையொப்பமிட்டுள்ளவர ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட்.––ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டப் பிரிவு 13(12)–ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3–ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்கள் M/s. சிவசக்தி டெக்ஸ்டைல்ஸ் (பிரதிநிதியாக உரிமையாளர் திரு.I.சிவகுமார்), திரு.ஐ.சிவகுமார் மற்றும் திருமதி.ந.தமிழரசி அவர்களுக்கு 16.07.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) வழங்கி, அந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் 15.07.2026 அன்றுள்ளபடியான தொகை ரூ. 53,83,529.57/– (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து எண்பத்து மூன்றா யிரத்து ஐந்நூற்று இருபத்து ஒன்பது மற்றும் ஐம்பத்து ஏழு பைசா மட்டும்) மற்றும் கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து அது செலுத்தப்படும்/ வசூலிக்கப்படும் தேதி வரை வட்டி மற்றும் இதர கட்டணங்களை சேர்த்துச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், மேற்படி அறிவிப்பு அளிக்கப்பட்ட பிறகும், கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள் மற்றும் அடமானதாரர் மேற்படி அறிவிப்பில் காணும் முழு தொகையையும் அதன் மீதான இதர கட்டணங்களையும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர், மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13 உட்பிரிவு 4 மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8–ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை 18 செப்டம்பர் 2026 தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் (SYMBOLIC POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள் மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ/நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது, ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட்.,–க்குச் செலுத்த வேண்டிய மேற்படி கோரிக்கை அறிவிப்பில் காணும் தொகை ரூ.53,83,529.57/– (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து எண்பத்து மூவாயிரத்து ஐந்நூற்று இருபத்து ஒன்பது மற்றும் ஐம்பத்து ஏழு பைசா மட்டும்) மற்றும் கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து அது செலுத்தப்படும்/ வசூலிக்கப்படும் தேதி வரை வட்டி மற்றும் இதர கட்டணங்களை சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் பற்றி மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு 8–ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

அடமான சொத்து விவரம்
"அட்டவணை"

"சொத்து திரு.I.சிவகுமாருக்குச் சொந்தமானது (விற்பனைப் பத்திர ஆவண எண்: 1738/2010)"

நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் அனைத்து முக்கிய பகுதிகள், அமைவிடம் சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடஞ்சாவடி சார்பதிவு மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், பெருமாகவுண்டம்பட்டி கிராமம், பழைய சர்வே எண் 39/7, மறு ச.எண் 39/7B1A படி புஞ்சை ஹெக்டேர் 0.38.0 புஞ்சை ஏக்கர் 0.94 சென்ட் பரப்பளவு,வரி ரூ.2.94 பரப்பளவு 2023 சதுர அடி நிலம்.

இதன் எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு: –
தரகர் பெரியசாமிக்குச் சொந்தமான நிலத்திற்கு தெற்கு
பெரியசாமிக்குச் சொந்தமான நிலத்திற்கு மேற்கு
கிழக்கு–மேற்குச் சாலைக்கு வடக்கு
1. சோமசுந்தரம் மற்றும் 2. ஜெயந்தி ஆகியோருக்குச் சொந்தமான நிலத்திற்கு கிழக்கு
மேற்கூறிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள அளவீடுகள்:
கிழக்கு–மேற்கு வடக்கு பக்கம் 41 அடி,
தெற்கு பக்கம் 40 1/2 அடி,
தெற்கு –வடக்கு கிழக்கு பக்கம் 51 அடி,
மேற்கு பக்கம் 48 1/4 அடி,

ஆக மொத்தம் 2023 சதுர அடி முழு நிலம், அதிலுள்ள கட்டிடம், கட்டிடத்தின் அனைத்து அமைப்புகள் மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து வழித்தட உரிமைகள் மற்றும் ஈஸ்மென்ட் உரிமைகளுடன். மேற்கூறிய சொத்து அமைவிடம் பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சி மற்றும் வீரபாண்டி ஒன்றிய எல்லை.

ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிட்.,–சார்பாக
அதிகாரபூர்வ அலுவலர்,
(கைபேசி: 9710457535)
தேதி : 18.09.2026
இடம் : சேலம்

IDBI BANK
ஐடிபிஐ வங்கி லிட
எண்.72, மே ஃபிளவர் 'E' கேஸில்,
டாக்டர் பாலசுந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து,
ATT காலனி, கோயம்புத்தூர்–641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு. ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய ரூ.59,07,580/– (01.09.2026 தேதி அன்று) தொகையை M/s.விவேக் என்டர்பிரைசஸ், (உரிமையாளர் திரு.விவேக்.B) என்பவரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, ஆக்கபூர்வ சுவாதீனம் (constructive Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, 27.10.2026 தேதியில் காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்), உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு' என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.84,30,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.8,43,000/–.

அசையாச் சொத்து விபரம்

சேலம் மாவட்டம்–636 007, சேலம் நகர மாநகராட்சி மற்றும் தாலுகா, அழகாபுரம் புதூர் கிராமம், நாகம்மாள் தோட்டம், மார்கபந்து வீதி, டவுன் சர்வே எண்.52/4, இதன் புதிய வார்டு K, பிளாக் 6, கதவு எண்.153–A, 153–Bல் உள்ள 736 சதுர அடி (535 சதுர அடி கட்டுமானப் பரப்பு) விஸ்தீரண நிலமும், அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் சேர்ந்த குடியிருப்புச் சொத்து.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு www.baanknet.com மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் இணையதளத்தில் பார்வையிடலாம். www.idbi.bank.in

தேதி : 16.09.2026
இடம் : கோயம்புத்தூர்
ஒம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

சேலம் மேட்டூர் சங்ககிரி எடப்பாடி	95666 11366
ஏற்காடு ஆத்தூர்	99946 46385
தருமபுரி	84896 34827

உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

சேலம்	98405 90012
ஓமலூர்	94433 93373
மேட்டூர்	94432 23065
ஏற்காடு	94432 01447
சங்ககிரி	94434 14850
ஆத்தூர்	93642 22063
தம்மம்பட்டி	94434 71248
எடப்பாடி	98659 77117
வாழப்பாடி	96009 69118
ஆட்டையாம்பட்டி	94892 94473

earc
என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி பிரைவேட் லிமிட்டெட் (என்கோர் ARC)
(EARC–Bank–032–Trust ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)
என்கோர் ARC பெறுநிறுவன அலுவலகம் : 5 வது தளம், ப்ளாட் எண். 137, செக்டார் 44, குருக்ராம் – 122022, ஹரியானா

மின்னணு ஏலத்துக்கான பொது அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் " 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு & விதி 9(1) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், EARC–Bank–032–Trust ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் என்கோர் ARC (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) க்கு பணி ஒப்படைவு செய்யப்பட்டுள்ள கணக்குகளின் கீழான நிலுவைத்தொகைகளுக்கான ஜாமீனாக, ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிட்டெட் ("ABFL") – க்கு அடமானம் செய்யப்பட்டு, என்கோர் ARC – ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களான M/s. சாய் தால் மில், திரு கணேஷ் மற்றும் திருமதி G அருணா ஆகியோரிடமிருந்து ஜாமீன் பெற்று கடனளித்த என்கோர் ARC (ஜாமீன் பெற்று கடனளித்தவர்) க்கு வர வேண்டிய 31.07.2026 ம் தேதியின் படியிலான தொகை ரூ. 90,65,265/– (ரூபாய். தொண்ணூறு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து மட்டும்) மற்றும் 01.08.2026 ம் தேதி முதல் வசூலாகும் வரை மேற்கொண்டு வரும் ஒப்பந்த வீதத்திலான வட்டி, இதர செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 09.10.2026 அன்று காலை 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

சொத்துக்களின் விபரம், ஜாமீன் சொத்துக்களுக்கான அடிப்படை விலை மற்றும் டேவணித்தொகை மற்றும் குறைந்தபட்ச விலைகோரல் அதிகரிப்பு தொகை ஆகியன கீழ்க்கண்டவாறு –

இனம் வரிசை எண்	கணக்கு பெயர்	சொத்து விபரம்	அடிப்படை விலை (ரூபாயில்)	டேவணித்தொகை (ரூபாயில்)	விலைகோரலில் குறைந்தபட்ச விலைப்புள்ளி அதிகரிப்புத்தொகை (ரூபாயில்)
1	M/s. சாய் தால் மில், திரு கணேஷ் & திருமதி G அருணா	ஷெட்யூல் "A" – சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, ரெட்டியூர் கிராமம், சர்வே எண். 35/2 ல் அமையப்பெற்ற புஞ்சை ஏக்கர் 5.67., க்கு தீர்வை ரூ. 8.55, உட்பிரிவு படி சர்வே எண். 35/2A., ல் உள்ள புஞ்சை ஹெக்டேர் 1.34.0 க்கு தீர்வை ரூ. 5.16/– உட்பிரிவு படி சர்வே எண். 35/2A1 புஞ்சை ஹெக்டேர் 1.30.5 க்கு தீர்வை ரூ. 5.00., இதில் உள்ள புஞ்சை ஏக்கர் 0.72 சென்ட் அல்லது 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம்., உட்பிரிவு படி வார்டு C, ப்ளாக் 4, T.S. எண். 11/2, உட்பிரிவு படி T.S. எண். 11/14, 11/15, கோல்டன் வேலி ப்ளாக் A, ப்ளாக் B ல் உள்ள 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்தில் உள்ள 584–3/4 சதுர அடி பரப்புடன் இதன் மேற்கண்ட பட்டியல் "A' சொத்தில் உள்ள பிரிபடாத பங்கு இடம் உள்ளிட்ட இந்த சொத்து விபரத்துடன் தொடர்புடைய சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதற்கான எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன – மேற்கு – 30 அடி அகல தென்வடல் சாலை, கிழக்கு – சர்வே எண். 35/1 ல் உள்ள கால்வாய், தெற்கு – K சின்னப்பனுக்கு சொந்தமான இடம், வடக்கு – சர்வே எண். 35/2B1 ல் உள்ள இடம், இவைகளுக்கு மத்தியில் உள்ள கிழமேல் வடக்கு புறம் – 242–1/4 அடி., தெற்கு புறம் – 217–3/4 அடி., தென்வடல் கிழக்கு புறம் – 135 அடி., மேற்கு புறம் – 136–1/2 அடி., என மொத்தம் 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம்., இதில் உள்ள 492–1/4 சதுர அடி பரப்புடன் இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள பிரிபடாத பாக இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். பட்டியல் "B" சொத்து – இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள 492–1/4 சதுர அடி பிரிபடாத பங்கு இடம் உள்ளிட்ட இந்த சொத்து விபரத்துடன் தொடர்புடைய சொத்து. பட்டியல் "C "சொத்து – இதன் மேற்கண்ட பட்டியல் A சொத்தில் உள்ள 31378 சதுர அடி பரப்பளவு கொண்ட இடமானது "கோல்டன் வேலி" என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட அபார்ட்மென்ட்., இதில் உள்ள மேற்சொன்ன அபார்ட்மென்டில் உள்ள 1004 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். B–104 உள்ளிட்ட B சொத்து விபரத்துடன் கூடிய சொத்து. இதன் கதவு எண். ஆ–104, வரி விதிப்பு படி புதிய கதவு எண். 101/28., இது பட்டியல் "B" சொத்துடன் தொடர்புடையது. D ஷெட்யூல் சொத்து – இதன் மேற்குறிப்பிட்ட "கோல்டன் வேலி" என்ற அபார்ட்மென்டில் கார் பைக் நிறுத்துவதற்கான ஒதுக்கப்பட்ட இடம், படிக்கட்டுகள், லிஃப்ட் உள்ளிற்றவற்றில் உள்ள 1/56 பிரிபடாத பங்கு மற்றும் அனைத்து உரிமைகள், போர்வெல், தண்ணீர் வழங்கும் அலகு, டீசல் ஜெனரேட்டர், கார் நிறுத்துமிடம், படிக்கட்டுகள், காம்பவுண்டு சுவர், காம்பவுண்டு சுவர் லைட், கேட், மோட்டார்கள், தண்ணீர் தொட்டிகள், செப்டிக் டேங்க், கழிவுப்பாதை, விளையாட்டு மைதானம், ஷட்டில் கார்க் விளையாடும் இடம், மகளிர் உடற்பயிற்சி கூடம், ஆண்கள் உடற்பயிற்சி கூடம், இவைகளில் உள்ள 1/56 பொது பங்கு மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் வழி வசதி உரிமைகள் உள்ளிட்ட இதனுடன் கூடிய சொத்து. இதன் மேற்குறிப்பிட்ட சொத்து, சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. (திருமதி G அருணா & திரு R கணேஷ் ஆகியோருக்கு சொந்தமானது)	48,49,000/– (ரூபாய். நாற்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்)	4,84,900/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

ஜாமீன் சொத்துக்களின் ஆய்வு தேதி	30.09.2026 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை
ஆன்லைன் விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி	08.10.2026 பிற்பகல் 03.00 மணிக்கு முன்பு
மின்னணு ஏல தேதி & நேரம்	09.10.2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி ஒவ்வொரு முறையும் 5 நிமிடம் என்றவாறு எண்ணிலடங்கா நேர நீட்டிப்புடன்.
ஏல வலைதளம்	https://bankeauctions.com

மின்னணு ஏல தேதி பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படும் பட்சத்தில், அத்தேதி, தன்னியல்பாகவே அடுத்த வேலை நாளுக்கு நீட்டிக்கப்படும்.
EARC–BANK–032 ன் அறங்காவலர் என்ற தகுதியில் மட்டும் என்கோர் ARC செயல்படுவதால், இந்த பொது அறிவிப்பில் குறிப்பிடப்படும் அதன் பெயரையும் அதற்கேற்றாற்போலவே கருதிக்கொள்ள வேண்டும்.
விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு கூர்ந்து, என்கோர் ARC ன் வலைதளம் https://www.encorearc.com & https://bankeauctions.com ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை பார்வையிடவும்.
விருப்பமுள்ள ஏலதாரர்கள் மேலும் ஏதேனும் தகவலுக்கு / விசாரணைக்கு, என்கோர் ARC ன் அதிகாரப்பூர்வ அலுவலர், திரு B.M. நாகராஜூ, அலைபேசி எண். 83840 74164 மற்றும் திரு K. நாகேந்திரன், அலைபேசி எண். 91762 91717 / 0124–4527200 nagaraju.bm@encorearc.com , getintouch@encorearc.com ல் தொடர்பு கொள்ளவும்.

B.M. நாகராஜூ
அதிகாரப்பூர்வ அலுவலர்
என்கோர் அஸட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி பிரைவேட் லிமிட்டெட்
தேதி : 18.09.2026
இடம் : சென்னை

அசையா சொத்து/க்கள் ஜப்தி செய்யப்பட்டதற்கான அறிவிப்பு
(2002–ம் வருடத்திய பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்ட பிரிவு 94 மற்றும் 2002–ம் வருடத்திய பல மாநில கூட்டுறவு சங்கங்களின் விதி 37 (5) மற்றும் விதி 37 (11)(d)

இ.பி.எண்.196/2026
இதில்
ஏ.ஆர்.சி எண்.419/2024

இவ்வறிப்பானது, தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கிக்காக (ரெப்கோ வங்கி) கூட்டுறவு சங்கங்களின் மத்தியப் பதிவாளரால் நியமிக்கப்பட்ட, விற்பனை அதிகாரி என்ற முறையில், பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 2002, பிரிவு 94 மற்றும் அதன் கூடிய விதி 37 (3)–ன் படி, கீழ்கண்ட தீர்ப்புக் கடனாளிகளுக்கு 17.02.2026 தேதியிட்ட ஒரு கேட்புத்தொகை அறிவிப்பை பிறப்பித்தது

1. திரு. P. மோகன், த/பெ திரு. பச்சமுத்து, தொழில் முகவரி: M/s. பாரத ஸ்டேட் வங்கி, சீனியர் தலைமை மெசஞ்சர், டாக்டர். சங்கரன் ரோடு, போஸ்ட் நாமக்கல் கிளை, நாமக்கல்.
2. திருமதி. M. தங்கம், க/பெ திரு. P.மோகன்
3. திருமதி. M. சாந்தி, க/பெ. திரு. P.செல்வம் (லேட்)
4. திரு. M. கதிரவன், த/பெ. திரு. P.மோகன்
5. திரு. M. விஜய், த/பெ. திரு. P. மோகன், அனைவரின் வீட்டு முகவரி: எண்.34, கோனேரிப்பட்டி மேற்கு தெரு, வார்டு எண்.20, ராசிபுரம் – 637408, நாமக்கல் மாவட்டம்.
6. திருமதி. E.ஹேமலதா, க/பெ. திரு. இளங்கோ, வீட்டு முகவரி: எண்.82, கோனேரிப்பட்டி மேற்கு தெரு, வார்டு எண்.20, ராசிபுரம் – 637408, நாமக்கல் மாவட்டம்.

கேட்புத் தொகை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.44,73,553/- (ரூபாய் நாற்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) 29.02.2024 தேதி வரை மற்றும் அதன் பின்னிட்டு 9% p.a. வட்டியை அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தீர்ப்புக் கடனாளிகள் திருப்பிச் செலுத்தத் தவறியதால் கீழ் கையொப்பமிட்ட விற்பனை அதிகாரி, மேற்சொன்ன சட்ட பிரிவு 94 அதன் கூடிய விதி 37 (5) மற்றும் விதி 37 (11) (d) ன், கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை 18.09.2026 (Date of attachment) ஆம் தேதி ஜப்தி செய்துள்ளார் என்று தீர்ப்புக் கடனாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் பொது அறிவிப்பு வழங்கப்படுகிறது.

இந்த அறிவிப்பின்படி நிலுவைத் தொகையைச் செலுத்த தீர்ப்புக் கடனாளிகளுக்கு மேலும் 15 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது. செலுத்த தவறும் பட்சத்தில் கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, விற்பனைக்கு கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இது முதற்கொண்டு, பொது மக்கள் குறிப்பாக தீர்ப்புக் கடனாளிகளும் / அடமானதாரர்களும் சகவமானவரும் சொத்திலோ/சொத்தின் பேரிலோ எவ்வித பரிவர்த்தனைகளும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் அப்படி ஏதேனும் மேற்கொண்டால் அது ரெப்கோ வங்கி ராசிபுரம் கிளைக்கு 29.02.2024 தேதிக்கு வர வேண்டிய கடன் தொகையான ரூ.44,73,553/- (ரூபாய் நாற்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மற்றும் அதன் பின்னிட்டு 9% p.a வட்டி மற்றும் செலவுத் தொகையினை உட்படுத்தியே செய்ததாக கொள்ளப்படும் என்பதை அறியவும்.

அசையா சொத்து விவரம்
திரு. P. மோகனுக்கு சொந்தமான சொத்து

நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் உப–பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலுக்கா, ராசிபுரம் டவுன், கோனேரிப்பட்டி மேற்கு தெரு, பழைய வார்டு எண்.17, புதிய வார்டு எண்.20, அளவு 2835 சதுர அடி. அளவு 30 அடி கிழமேல் இருபுரம், 94½ அடி தென்வடல் இருபுரம். இதன் எல்லைகள் :
தெற்கு – திரு. சேகர் மற்றும் திரு.மணி அவர்களுக்கு சொந்தமான வீடு மற்றும் 3 அடி அகல கிழமேல் பொது வழி பாதை,
வடக்கு – தேவ் (என்கிற) அப்பாசாமி நாய்க்கரின் மனை,
மேற்கு – சின்னுசாமியின் மனை,
கிழக்கு – சுந்தரராஜ்வின் மனை.

RCC மாடி வீடு மற்றும் ACC ஷீட் வீடு, எஸ்.சி.எண்.04–501–004–0874 தண்ணீர் இணைப்பு எண்.6929, கதவு எண்.20, டவுன் சர்வே டவுன் பட்டா எண்.1336, வார்டு D, பிளாக் எண்.8, பழைய சர்வே எண்.23/2, பழைய டி.எஸ்.எண்.103/1ஏ மற்றும் புதிய டி.எஸ்.எண்.103/14 அளவு 0.0259.0 (259 சதுர மீட்டர்).

இடம்: ராசிபுரம்
தேதி: 18.09.2026
விற்பனை அதிகாரி
MSCS Act 2002 ன்படி நியமிக்கப்பட்டவர்

கல்வி, வேலை வாய்ப்பு செய்திகளுக்கு...
www.dinamani.com

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
கடன் வசூல் நிர்வாகக் கிளை : எண்.11/952, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம்,
கோயம்புத்தூர் - 641 012. போன் : 0422 - 2497178 இ-மெயில் : iob1551@iob.bank.in

அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

(பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) நிபந்தனையின் கீழ்)
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், வங்கிக்குப் பிணையப்பட்ட அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் (கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் : M/s. ரக்ஷிதா டெக்ஸ்டைல்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திருமதி.உமாமகேஸ்வரி, க/பெ.திரு.P.S.சதீஷ் குமார், எண்.37, சொக்கநாத வீதி, ஈரோடு – 638 001 மற்றும் உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர்கள் : 1. திரு.M.P.சக்திவேல், த/பெ.திரு.K.M. பன்னீர்செல்வம், கதவு எண்.9, தில்லை நகர், IOB கோட்டை கிளை அருகில், ஈரோடு – 638 001, 2. திருமதி. R.சுபா, க/பெ.திரு.M.P.சக்திவேல், கதவு எண்.9, தில்லை நகர், IOB கோட்டை கிளை அருகில், ஈரோடு – 638 001 ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய 16.09.2026 தேதி வரையான தொகை ரூ.7,00,90,861/– (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூறாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்று மட்டும்) நிலுவைகளுக்காக 'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே' மற்றும் 'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி' என்கிற நிலையில் 09.10.2026 தேதி அன்று விற்பனை செய்யப்படுகிறது. குறைந்தபட்ச விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் அட்டவணைச் சொத்தின் கீழே தரப்பட்ட விபரப்படியாகும்.

சொத்துக்கள் விபரம் : பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை / அசையாச் சொத்து.
திரு. M.P.சக்திவேல் மற்றும் திருமதி. R.சுபா ஆகியோருக்குச் சொந்தமான சொத்து. சொத்து ID – IOBARAKSHITHA02
திரு.K.M.பன்னீர்செல்வம் மகன் திரு.M.P.சக்திவேல் மற்றும் திரு.M.P. சக்திவேல் மனைவி திருமதி.R.சுபா ஆகியோரது பெயரில் நாமக்கல் 638008, குமாரபாளையம் தாலூகா, பள்ளிபாளையம் – குமாரபாளையம் மெயின் ரோட்டில் ஜெயலட்சுமி தியேட்டர் எதிரில், குமரன் நகர், வார்டு எண்.2ல் க.ச.எண்.168/3, மறுசர்வே எண்.168/3B2ல் (பசுமைமிகு பூமி) லேஅவுட் எண்.187ன் படி கதவு எண். 4, 447/1, 4, 447/2 முதல் 5 முடிய உள்ள காலி நிலம், 18041 ச.அடி விஸ்தீரணம் கொண்டுள்ளது. இதில் இனம் 1 சொத்து, திரு. M.P. சக்திவேலுக்குச் சொந்தமான 8485 ச.அடி விஸ்தீரண நிலத்தின் எல்லைகள் : 30லிங்க் அகல கிழமேல் வண்டித்தடத்துக்கு வடக்கு, திருமதி. R.சுபாவுக்குச் சொந்தமான சொத்துக்குக் கிழக்கு, ஓரக்குழிக் காட்டுக்குத் தெற்கு, P.ராஜாமணிக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் வடபுறம் 67 அடி 8 அங்குலம், கிழமேல் தென்புறம் 70 அடி, 6 அங்குலம், தென்வடல் கிழபுறம் 115 அடி, தென்வடல் மேல்புறம் 130 அடி 6 அங்குலம். இனம் 2 – திருமதி. R.சுபாவுக்குச் சொந்தமான 9556 ச.அடி விஸ்தீரண நிலத்தின் எல்லைகள் : 30 லிங்க் அகல கிழமேல் வண்டித் தடத்துக்கு வடக்கு, திருமதி.ராஜாமணிக்கு சொத்துக்குக் கிழக்கு, ஓரக்குழிக்காட்டுக்குத் தெற்கு, திரு. M.P சக்திவேலுக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு, அளவுகள் : கிழமேல் வடபுறம் 67 அடி 8 அங்குலம், கிழமேல் தென்புறம் 70 அடி 6 அங்குலம், தென்வடல் கிழபுறம் 130 அடி 6 அங்குலம், தென்வடல் மேல்புறம் 146 அடி, ஆக இனம் 1 மற்றும் 2 சொத்தின் மொத்தம் 18041 ச.அடி நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள அனைத்து சிறப்பு கட்டுமானங்களும் பிறவும் சேர்ந்த சொத்து, 4வது வார்டு, பள்ளிபாளையம் அக்ரகார கிராம ஊராட்சியில் கதவு எண்.4–447, 4–447/2, 3, 4, 5, 6, 7 மற்றும் 8 உடன் உள்ளது.

குறைந்தபட்ச விலை : ரூ.2,45,47,000/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஐந்து லட்சத்து நாற்பத்து ஏழாயிரம் மட்டும்)
(பொருந்தும் TDS மற்றும் baanknet போர்டல் செலவுகள் உள்ளிட்டு).
முன்வைப்புத் தொகை : ரூ.24,54,700/– (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து எழுநூறு மட்டும்).
ஏல உயர்வு மடங்கு: ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL சட்டபூர்வ நிலுவைகளை விட வங்கியின் நிலுவைகளுக்கே முன்னுரிமை உண்டு.

இ–ஏலத் தேதி/நேரம் : 09.10.2026 (வெள்ளிக்கிழமை); காலை 10:30 மணி முதல் மதியம் 01:30 மணி வரை. ஏலம் நிறைவடையும் வரை, ஒவ்வொன்றும் 10 நிமிட தன்னிச்சையான நீட்டிப்புடன் ஏலம் நடைபெறும் தளம் : https://baanknet.com

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட இ–ஏலத்தின் சேவையாளரின் https://baanknet.com 'லிங்'கில் அல்லது வங்கியின் www.iob.in [https://www.iob.in/TenderDetails.aspx/Tendertype=E_Auction] இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 17.09.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் ஆகியோருக்கான, மேற்படி கடனிற்காக மேற்படி தேதியில் நடைபெறும் இ–ஏலத்திற்கான, 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) / விதி 9(1) ன் கீழான அறிவிப்பாகவும் இதனைக் கொள்ள வேண்டியது.